கைத்தொழில் மற்றும் வழுங்கல்
முகாமைத்துவ அமைச்சு

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

முழுமையாக அரசாங்கத்திற்கு உடமையான கம்பனி

ஆண்டறிக்கை

2019/2020

தலைமை அலுவலகம்
561/3,
எல்விட்டிகல மாவத்தை,
நாராஹென்பிட்டிய,
கொழும்பு - 05

சுரங்கம்
கஹடகஹ சுரங்கம்
மதுராகொட
தொடங்கஸ்லந்த

தொலைபேசி : 011- 2368738
தொலைநகல் : 011- 2058062
மின்னஞ்சல் : kgll@sltnet.lk
இணையத்தளம் : www.kgraphite.lk

தொலைபேசி : 0372252015
தொலைநகல் : 0374931711

பொருளடக்கம்

அறிமுகம்	01
தலைவரின் கண்ணோட்டம்	02
கணக்காய்வுக் குழு அறிக்கை	04
கூட்டு நிறுவனத் தொலைநோக்கு, பணி மற்றும் குறிக்கோள்கள்	05
நிறுவனக் கட்டமைப்பு	06
பணிப்பாளர்களின் அறிக்கை	07
நிதிசார் வெளிப்பாடுகள்	10
வருடாந்தக் கணக்குகள்	11
கூட்டம் பற்றிய அறிவித்தல்	12
பதிலாள் படிவம்	13

அறிமுகம்

கஹடகஹ கிறபைட் சுரங்கம்

கஹடகஹ சுரங்கம் இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் மதுரகொட, **தொடங்கஸ்லந்தவில்** கொழும்பு பிரதான நகரத்தில் இருந்து சுமார் 90 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளதுடன் **கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால்** (கேஜீஎல்எல்) முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. இது முழுவதுமாக அரசாங்கத்தின் உடமையான மக்கள் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி என்பதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு கைத்தொழில் அமைச்சின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். கம்பனியின் பிரதான பங்குதாரர் **பொதுத் திறைசேரியின் செயலாளர்** ஆவார். கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் பிரதான கொள்கை ஆக்க அமைப்பு, நிறைவேற்றுத் தலைவரால் தலைமை வகிக்கப்படும் பணிப்பாளர்கள் சபையாவதுடன் கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் அதன் நேர் வரிசை அமைச்சு மற்றும் பொறுப்புத் திறைசேரியிடம் இருந்து அதன் கூட்டு நிறுவனக் கொள்கையின் சாராம்சத்தைப் பெறுகின்றது.

கஹடகஹ சுரங்கம், ரிதீகம பிரதேச செயலாளர் பிரிவில், தொடங்கஸ்லந்த, மதுரகொடவில் மலைசார்ந்த பிரதேசத்தில் 25 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளதுடன் காணியின் விஸ்தீரணம் ஏறத்தாழ 102 ஏக்கர்களாகும். 102 ஏக்கர் காணியின் மேற்பரப்பில் 76 ஏக்கர்களில் தென்னைப் பயிர்ச்செய்கை கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால் கையாளப்படுகின்றது.

இலங்கையில் போகல சுரங்கம் மற்றும் கஹட்டகஹ சுரங்கம் ஆகிய பிரபல்யமான இரு பிரதான சுரங்கங்கள் உள்ளன. கஹட்டகஹ சுரங்கம் இரு சுரங்களின் ஒன்றிணைப்பாகும். கஹடகஹ மற்றும் கொலங்கஹ சுரங்கங்கள் என 1872 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பட்டு 1973 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டதை அடுத்து இரு சுரங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே சுரங்கமாக செயற்பட்டுவருகின்றது.

சுரங்கம் 2000 அடி 610 (மீற்றர்) ஆழமாக இருப்பதுடன் இதுவே இலங்கையில் உள்ள ஆழமான சுரங்கமாகும். சுரங்கத்தை அடைவதற்கு 2 துளைகொண்ட வழிகள் உள்ளன. கஹடகஹவில் உள்ள துளையின் ஆழம் 1132 அடி (345மீற்றர்) அளவிலும் கொலோன்கஹ 330 அடிவரை (101 மீற்றர்) ஆழமானதாகும். துளைகள் இரு வேறு பகுதிகளினால் சுரங்கத்தை அடைகின்றன. துளையின் அடிவாரத்தில் கீழ் மட்டத்தில் 2000 அடி (610 மீற்றர்கள்) மட்டத்தை அடையும் வரை இழுவைப் பொறிமுறைகள் உள்ளன. பிரதான துளையும், இழுவைப் பொறிமுறையும் சுரங்கத்தின் பல்வேறு மட்டங்களிற்கு நிலக்கீழ் தொழிலாளர்களை 1132 அடி முதல் 2000 அடி மட்டம் வரை ஒன்று திரட்டுவதற்காகவும் சுரங்க அகழ்வுகளை வெளியே கொண்டு வருவதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. சுரங்கத்தில் 500 மீற்றர்கள் வரையான ஆழம் வரையே அதன் அகலமான பகுதியாகும்.

கஹடகஹ உற்பத்தியின் தனித்துவம்

உயர்ந்த இரக இயற்கைத் திரள் வகைப் பளிங்குருக் காரீயத்திற்கென வணிகரீதியான ஒரேயொரு வழங்குனர் இலங்கையாகும். குறிப்பாக கஹட்டகஹ காரீய சுரங்கத்தில் இருந்து 99% மேற்பட்ட காபனைக் கொண்ட அதி தூய இயற்கைத் திரள்வகைக் காரீயம் பூரண பளிங்குரு வடிவில் அகழ்ந்தெடுக்கப்பட்டுவருகின்றது. இவை திரள், ஊசியுரு, நுண்தகட்டு வகை மற்றும் கீற்று வடிவில் அமைந்துள்ளது. இயற்கைப் பளிங்குருத் திரள்வபைக் காரீயச் சந்தையின் ஏகபோக உரிமையைப் பெற்ற இழிவளவு மாசுக்களை உடைய உயர் சதவீத காபனைக் கொண்ட பளிங்குருத் திரள்வகைக் கஹடகஹ காரீயம் உலக சந்தையில் தனித்துவம் மிக்க உற்பத்திப் பொருளாக அங்கீகாரம் பெற்று அதன் நற்பெயர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தலைவரின் கண்ணோட்டம்

2019 -2020 ஆம் ஆண்டறிக்கையைத் தயாரிப்பதற்காக, இந்தச் செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் (கேஜீஎல்எல்) மறுமலர்ச்சி மற்றும் நிறுவனத்தின் செயல்முறையின் திருப்பத்தின் பின்னர் உலகிற்கு உயர் தூய்மையான இயற்கை படிக கிரபைட்டுகயை +99%C வழங்குகின்றது.

நான் கைத்தொழில் அமைச்சின் கீழ் தலைவராக 28.09.2022 கடமைகளைப் பொறுப்பேற்று, நான் 2019/2020 காலப்பகுதிக்குரிய தலைவரின் கண்ணோட்டமாக இந்த அறிக்கையை சமர்ப்பிக்கின்றேன். மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் கம்பனியின் செயலாற்றுகையைப் பார்க்கும் போது அது நேர்மறையாக உள்ளது.

உற்பத்தி

மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டான 2019/2020 காலப்பகுதியில் 573 மெற்றிக் தொன் மூலக் காரீயம் பிரித்தெடுக்கப்பட்டது. கடந்த ஆண்டு பெறப்பட்ட 732 மெற்றிக்தொன் காரீயத்துடன் ஒப்பிடுகையில் 51.7% வீத வீழ்ச்சியைக் காட்டுகின்றது. கூட்டு ஒப்பந்தத்தை மேலும் செயற்திறன் மிக்க நிலைக்கு கொண்டுவருவதற்கு நிர்வாகம் தற்போது திருத்தங்களை மேற்கொள்வதற்கு பரிசீலித்து வருகின்றது, காரணம் ஊழியர்கள் எப்போதும் இலக்குக்கு அண்மித்த உற்பத்தியை மேற்கொள்வதற்கு முயலுகின்றதுடன் மாதாந்த உற்பத்தி தொழிலாளர்களின் செலவுக்கு நேர்வரிசையாக அதிகரிக்கவில்லை.

விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்

413 மெற்றிக் தொன் பதப்படுத்தப்பட்ட காரீயம் ரூபா 126.62 மில்லியனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், கடந்த ஆண்டு பெறப்பட்ட ரூபத 127.5 மில்லியன் வருமானத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் வருமானம் ரூபா 1 மில்லியனால் குறைவடைந்துள்ளது. 97/99%C விற்கான விசேடமாக பதப்படுத்தப்பட்ட உயர்தரக் காரியத்தின் குறைந்தளவான அசைவு வருமானத்தைக் குறைத்துள்ளது.

நிதி நிலைமை

வழமையாக, பெரும்பாலான எமது கிரயக் கூறுகள் இயற்கையாகவே நிர்ணயிக்கப்பட்டவையானதுடன் வருமானக் குறைவுடன் முகாமைத்துவம் அதன் செலவினத்தைக் குறைப்பதற்கு அதி உயர் முயற்சியை எடுக்கின்றது. எனினும் கம்பனி ரூபா 9.78 மில்லியனை வரிக்கு முன்னைய இலாபமாக அறிக்கையிட்டது. இது கடந்த ஆண்டு பெறப்பட்ட ரூபா 2.84 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடுகையில் இலாபமானது ரூபா 12.62 மில்லியனால் அதிகரித்துள்ளது.

நிலத்தடி சுரங்க அபிவிருத்திகள்

எவ்வாறெனினும், குறைந்த நிதியின் கீழும் நாம் செயற்படுகின்றோம். நிலத்தடி அபிவிருத்தி வேலைகளுக்காக தேவையான பொறி மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிலத்தடி அபிவிருத்திக்கு ரூபா 9.41 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

தெங்குப் பயிர்ச்செய்கையும் பெருந்தோட்ட அபிவிருத்தியும்

நாம் ஏற்கனவே 52 ஏக்கர் தென்னம் பயிர்ச்செய்கை மீள்நடுகையில் ஈடுபட்டுள்ளோம். தென்னந் தோட்டம் மிகச் சிறந்த அளவில் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதுடன் தோட்டத்தைப் பராமரிப்பதற்காக 8 ஊழியர்களை தொடர்ந்து வழங்கியுள்ளதுடன் உள் தோட்டப் பயிரினத் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளும் உரங்கள் முதலியவையும் வழங்கப்பட்டுள்ளன. உள்தோட்டப் பயிற்செய்கை கருத்திட்டத்தின் கீழ் மிளகு மற்றும் வாழைப் பயிற்ச்செய்கைகயை மேற்கொள்வதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையின் உதவி கிடைக்கப்பெற்று மிகவும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டுவருகின்றன.

எவ்வாறெனினும், சுரங்க நிலப்பரப்பின் 102 ஏக்கர்களில் 50 ஏக்கர்கள் குறித்த காணியை இரு தரப்பினரில் ஒருவருக்கேனும் பயன்படுத்துவதற்கு நீதிமன்ற வழக்கில் கட்டளையிடப்படாமையால் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளதுடன் இதன் விளைவாக காடாக மாறி கிராமத்தவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், முன்னாள் ஊழியர்கள் சிலர் ஊழியர் விடுதிகளில் பலவந்தமாக குடியிருக்கின்றனர். கம்பனிக்கு எந்தவித நலனும் இன்றி யொவுன் சேனாங்க மற்றும் சமுர்த்தி வங்கியால் 9 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் கம்பனிக்கு உரிய காணியின் சில பகுதிகளில் பலவந்தமாகக் குடியிருக்கப்படுவதுடன் அதிகாரமற்ற முறையில் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு சட்டவிரோதமான முறையில் குடியிருக்கப்படுகின்றது.

தொழிலாளர்களின் நலன்புரி மற்றும் பிரச்சனைகள்

வளங்களின் வினைத்திறன் மற்றும் பயனுறுதித் தன்மையை முன்னேற்றும் வகையில் முகாமைத்துவத்தின் மேலாண்மைத்துவ அணுகுமுறையின் மூலம் ஊழியர்களுடனான உறவுமுறை பேணப்பட்டது. நிலத்தடி தொழிலாளர்களின் நடத்தை அவர்களது வேலையின் சுற்றுச் சூழல் மற்றும் ஆபத்தான தன்மை காரணமாக வெளித்தள தொழிலாளர்களினதில் இருந்தும் வேறுபட்டதாகும்.

மீளாய்வாண்டின் போது கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டினால் ஈட்டப்பட்ட எந்தவித வெற்றியும் இந் நிறுவகத்தின் சகல ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடமை உணர்ச்சி இல்லாது சாத்தியமானதல்ல. குறிப்பாக நிலத்தடி தொழிலாளர்கள். நிலத்தடி தொழிலாளர்களின் இத்தகைய பங்களிப்பு இவர்கள் எந்த வேளையிலும் ஆபத்திற்கு உள்ளாகும் நிலையில் உள்ளமையால் எப்போதும் நினைவுகூரப்பட வேண்டியதுடன் மெச்சப்பட வேண்டியதாகும்.

மீளாய்வாண்டின் போது கூட்டுப் பணிப்பாளர்களும் கம்பனியின் நலனுக்காக தமது மட்டற்ற ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளனர்.

நான் இந்த சந்தர்ப்பத்தை கௌரவ கைத்தொழில் அமைச்சர், கௌரவ கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் செயலாளர் மற்றும் கைத்தொழில் அமைச்சின் ஊழியர்கள், திறைசேரி செயலாளர் மற்றும் ஊழியர்கள் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்கிய திறைசேரிச் செயலாளர் மற்றும் ஊழியர்களுக்கும் மற்றும் குறிப்பாக பணிப்பாளர் சபைக்கும் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட் நிறுவனத்தின் ஊழியர்களுக்கும் நான் நன்றி கூற விரும்புகின்றேன். இறுதியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களுக்கும் கணக்காளர்களுக்கும் அவர்களது ஊழியர்களுக்கும் கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட்டின் கணக்காய்வாளர்களாக எவ்வித தயக்கமும் இல்லாது இவ்வாண்டிலும் தமது திருப்திகரமான சேவையை வழங்கியமைக்காக எமது நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

துசிர மல்லவ தந்ரி (L.L.B)

சட்டத்தரணி

தலைவர்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

12 ஒக்டோபர் 2022

கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் பணி

கணக்காய்வுக் குழுவின் குறிப்பு விதிமுறை மற்றும் வகிபாகம், சபையின் நிதியியல் கூற்றுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டக்கான ஒருங்கிணைந்த மேற்பார்வை பொறுப்புகளை பூர்த்தி செய்வதற்கும் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்குவதற்கு பணிப்பாளர் சபைக்கு உதவுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு பொருத்தமான ஆலோசனைகளை வழங்குதலாகும்.

கணக்காய்வுக் குழுவின் அமைப்பு

கணக்காய்வுக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியதாகும். இவர்களில் ஒருவர் கம்பனியின் ஒரே பங்குதாரரான திறைசேரியால் முன்மொழியப்படுபவரின் தலைமையின் கீழும் சபையின் செயலாளரை அழைப்பாளராகக் கொண்டதாகவும் அமையப்பெற்றுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட கணக்காய்வுக் குழுவின் அமைப்பு பின்வருமாறானதாகும்:

திரு.ஆர்.எல்.வீரசேகர	–	தலைவர், திறைசேரி பிரதிநிதி/ பணிப்பாளர்
திரு.உபுல் அபேவர்த்தன	–	பணிப்பாளர்/ அங்கத்தவர்
திரு. எஸ்.எஸ்.கட்டவலகெதர	–	பணிப்பாளர்/ அங்கத்தவர்
திருமதி.நிலானி ஜயசிறி	-	கணக்காய்வாளர் நாயகத் திணைக்கத்தின் பிரதிநிதி – அவதானிப்பாளர்
திரு.பி.கே.எம்.ஜே.ரொட்ரிகோ		பிரதான உள்ளக கணக்காய்வாளர், கைத்தொழில் அமைச்சு, அவதானிப்பாளர்

கூட்டங்களும் அமர்வுகளும்

குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்படுவதுடன் நான்கு கூட்டங்கள் 2020 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்தது. கம்பனியின் முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சால் நியமிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளரும் கணக்காளரும் தேவை ஏற்படும் போது கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்படுகின்றனர்.

செயற்பாடுகள்

கணக்காய்வுக் குழு, வரைவுக் கணக்குகள், வெளிவாரிக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தும் கலந்தாலோசித்தும் தனது கடமைகளை நிறைவேற்றியது. கணக்காய்வுக் குழு இவ் அறிக்கைகளை மீளாய்வு செய்து தற்போதைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துவதன் மூலம் கம்பனி எதிர்நோக்கும் மோசடி, தவறுகள், செயற்பாட்டு, நிதிசார் இடர்கள் நிகழ்வதற்கான சாத்தியப்பாட்டையும் அதனாலான விளைவுகளையும் இழிவளவாக்குவதற்காக செயற்படுத்தக்கூடிய மேலதிகக் கட்டுப்பாடுகளையும் இடர் நீக்கல் மூலோபாயங்களையும் பரிந்துரைத்துள்ளது. ஒவ்வொரு கூட்டத்தின் போதும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் உள்ள விடயங்களை ஆழமாக கலந்தாலோசித்து வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு முகாமைத்துவத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக கலந்துரையாடல்களை அடுத்து தீர்மானங்களை எடுப்பதற்காக சில விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

குழு வெளிவாரி கணக்காய்வாளர் 2019/2020 ஆம் ஆண்டிற்காக உண்மையானதும் நியாயமானதுமான அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியுள்ளமையையும் அவதானித்தது.

குழுவின் சார்பாக

கணக்காய்வுக்குழுத் தலைவர்
23.08.2022

கூட்டு நிறுவனத் தொலைநோக்கு

"உலகில் இயற்கையான பளிங்குருத் திரள் வகைக் காரீயத்தின் தனித்துவமான மூலமாக விளங்குதல்"

கூட்டு நிறுவனப் பணி

"நாட்டில் காரீயக் கனிப்பொருள் மூலங்களில் உச்சப் பயன்பாட்டுடன் அன்னிய செலாவணியைச் சம்பாதிப்பதன் மூலம் இலங்கைப் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனான செயலாக்கமுள்ள ஓர் பங்குதாரராக இருத்தல்"

கூட்டு நிறுவனக் குறிக்கோள்கள்

"உயர்தரமான தூய்மையான காரீயத்தை ஏற்றுமதி செய்வதற்காக அகழ்தல், பதப்படுத்தல், மற்றும் உயர்ந்த பட்ச பெறுமதியைச் சேர்த்தலும், காரீய அடிப்படையிலான கைத்தொழில்களை விருத்தி செய்தலுமே கம்பனியின் குறிக்கோள்களாகும்."

நிறுவனக் கட்டமைப்பு

கஹட்டகஹ கிறபைட் லங்கா லிமிடட், நிறைவேற்றுத் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை ஒன்றின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் தொழிற்பாடானது பின்வரும் விடயப் பரப்புகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- ✓ அகழ்தல்
- ✓ பதப்படுத்துதல்
- ✓ பொறிமுறைசார் மற்றும் மின்பொறியியல்
- ✓ சந்தைப்படுத்தல்
- ✓ தனியாள்
- ✓ நிருவாகம்
- ✓ நிதி மற்றும் கணக்கீடு
- ✓ விநியோகங்கள் மற்றும் களஞ்சியங்கள்
- ✓ பொது சிவில் பொறியியல்
- ✓ பாதுகாப்பு

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

2020 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணிப்பாளர்களின் ஆண்டறிக்கை

2020 மார்ச் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர்கள் இத்தால் சமர்ப்பிக்கின்றனர். இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக, அதில் தெரிவிக்கப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர்கள் சபையின் பொறுப்பாகும்.

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அதன் மீதான கணக்காய்வாளர்களின் அறிக்கை 19.10.2022 அன்று பணிப்பாளர்களினால் அங்கீகரிக்கப்பட்டது.

பிரதான செயற்பாடுகள்

கம்பனியின் பிரதான செயற்பாடுகள் :

1. 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலால் உருவாக்கப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலொன்கஹ, கஹட்டகஹவில் குறித்தொதுக்கப்பட்ட வணிக அலுவல்களை வெற்றிகரமான முறையில் கொண்டுநடாத்தல்.

2. கூறப்பட்ட அரச அகழ்வு, கனிப்பொருள், அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் கொலொன்கஹ, கஹட்டகஹ எனக் குறித்தொதுக்கப்பட்ட பகுதியால் உடமையாக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட அசையும், அசையாச் சொத்துக்களின் சொத்துடமைக்கு பின்னுரிமையாளராகுதல்.

தொழிற்பாடுகளின் மற்றும் நிதியில் முனைப்புறுத்தல்களின் மீளாய்வு

இலாப அல்லது நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று, நிதியியல் நிலைமைக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று மற்றும் நிதியியல் குறிப்புகளை உள்ளடக்கிய 31 மார்ச் 2020 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுகள் ஆண்டறிக்கையின் 03 தொடக்கம் 25 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுகளுக்கான பணிப்பாளர்களினதும் கணக்காய்வாளர்களினதும் உரிய பொறுப்புகள்

நிறுவனத்தின் விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான பார்வையை முன்வைக்கும் வகையில் நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையவர்களாவர். இந்த நிதி அறிக்கைகள் 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலை சட்டம் மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் தொடர்ச்சியான பட்டியலிடப்பட்ட விதிகள் ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டதாக பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்றுக்கொண்ட கணக்கியல் கொள்கைகளின் விபரங்கள் மற்றும் வருடத்தில் இலங்கை கணக்கியல் நியமத்தில் செய்யப்பட்ட மாற்றங்களின் தாக்கம் ஆகியவைவ நிதிக் கூற்றின் 14-22 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டள்ளது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

ஒவ்வொரு ஆண்டினதும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றில் ஏற்பட்ட அசைவுகள் நிதிக்கூற்றின் குறிப்பு 20 இல் தரப்படுகின்றது.

முதலீடுகள்

ஊழியர்களின் பணிக்கொடைக் கடப்பாடுகளை வழங்குவதற்காக, கம்பனி ரூபா 12.28 மில்லியனை நிலையான வைப்பாக முதலீடு செய்துள்ளது.

அன்பளிப்பு

கணக்கீட்டுக் காலப்பகுதியின் போது கம்பனி அன்பளிப்புகளை மேற்கொண்டிருக்கவில்லை.

பணிப்பார்களின் ஒய்வு
சங்கத்தின் 97 உறுப்பு நியதிகளுக்கு அமைவாக, திரு நீல் வத்துஹேவா, ரூச்சிர எல் வீரசேகர, ஜனித் டினுக் ஸொக்மன, டபில்யூ, என் பி தமித் மேவன், சம்பத் கே கெட்டவலகெதர, கபில பி ஏக்கநாயக்க என்போர் பணிப்பாளர் சபைக்கு ஒரு வருடத்திற்கு மேலாக நியமிக்கப்பட்டதுடன், அதிலிருந்து முதலாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில், நியமனம் பெற்றவர்களை பணிப்பாளர் சபை அங்கத்தவர்/ பணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுப்பதற்கு அவர்கள் தாமாக முன்வந்துள்ளார்கள்.

31 மார்ச் 2020 அன்று பணிப்பாளர்கள்

31 மார்ச் 2020 அன்று காரியாலயத்தில் இருந்த பணிப்பாளர்களின் பெயர்கள் கீழ்வருமாறு:

முழுப் பெயர்

திரு. மொஹமட் ரபீக் மொஹமட் ஹம்ஜாட்	(13.03.2019 இருந்து 09.12.2019)
திரு.கே.டி.சித்ரபால, மேலதிகச் செயலாளர், PE (கடமை அணவல்)	(17.12.2019 இருந்து 12.02.2020)
திரு.நீல் வத்துஹேவா	(13.02.2020 இல் இருந்து)
திரு.என்.பி.ஏ.ஆர.ஜயவர்தன	(13.03.2019 இருந்து 15.04.2019)
திரு.ஜே.ரஸ்நாயக்க	(15.04.2019 இல் இருந்து)
திரு.ஏ.டி.எல்.ஜி.கலன்சூரியஸ	(16.01.2020 இல் இருந்து)
திரு.இஸ்மியில் மொஹமட் ஜுனைஸ்	(13.03.2019)
திரு.உதுமான்கண்டு மொஹமட் நிஸார்	(13.03.2019)
திரு.பாலசூரிய முதலியான்சலாகே நந்த விபுல பண்டார பாலசூரிய	(13.03.2019)
திரு.சாரங்க அரம்பட்ட	(13.03.2019 இல் இருந்து 09.12.2019 வரை)
திரு.ஏ.எச்.எம்.அலவி	(13.03.2019 இல் இருந்து 09.12.2019 வரை)
திரு.எல்.கே.ஜகத் பிரியங்கர	(28.02.2020 இல் இருந்து 18.06.2021 வரை)
திரு.மொஹமட் புவாட் முசாம்பில்	(28.02.2020 இல் இருந்து)
திரு.டபில்யூ.என்.ஆர்.பி.தமித் மேவன்	(28.02.2020 இல் இருந்து)
திரு.ஜனித் தினுக் ஸொக்மன்	(28.02.2020 இல் இருந்து)
திரு.எஸ்.எஸ்.கட்டவலகெதர	(28.02.2020 இல் இருந்து)

பணிப்பாளர் சபை கீழ்வருமாறு பிரகடனப்படுத்துகின்றது.

1. நிறுவனம் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு முரணான எந்தச் செயலிலும் ஈடுபடவில்லை.

2. நிறுவனம் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களில் உள்ள அனைத்து பொருள் நலங்களும் மற்றும் அவர்கள் பொருள் ரீதியாக ஆர்வமுள்ள விடங்களில் வாக்களிப்பதில் இருந்து விலகினர்

3. பங்குதாரர்களை சமமாக நடத்துவதை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

4. வியாபாரமானது, தேவைக்கேற்ப அனுமானங்கள் அல்லது தகுதிகளை ஆதரிப்பதன் மூலம் தொடர்நது நடந்துகொண்டிருக்கும் எண்ணத்தில்: மற்றும் அவர்கள் நிதி, செயலாற்றுகை மற்றும் இணக்க கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்தவம் ஆகியவற்றை உள்ளடக்கிய உள் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்துள்ளனர், மேலும் அவற்றின் செயற்திறன் மற்றும் வெற்றிகரமான பின்பற்றுதல் மற்றும் அதைச் செய்ய முடியாவிட்டால் நியாயமான உத்தரவாதத்தைப் பெற்றுள்ளனர்.

பணிப்பாளர்களின் ஊதியம்
மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் மொத்த ஊதியத் தொகை நிதிக்கூற்றின் குறிப்பு 13 இல் தரப்பட்டுள்ளது.

கம்பனியின் ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை

கம்பனியின் ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை நிதிக்கூற்றுக்களில் குறிப்பு 06 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்களின் அறிவு மற்றும் நம்பிக்கைக்கு அமைவாக அரசாங்கத்திற்கும் பணிப்பாளர்களுக்கும் தொடர்புபட்ட அனைத்து நியதிச் சட்டக்கொடுப்பனவுகளும் உரிய திகதியில் செலுத்தப்பட்டு அல்லது கம்பனியின் புத்தகங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்பதில் அவர்கள் திருப்திகரமாக உள்ளனர்.

தற்செயல் பொறுப்புகள் மற்றும் மூலதன ஈடுபாடுகள்

31 மார்ச் 2020 இல் மூலதனச் செலவினங்களுக்காக செய்யப்பட்ட தற்செயல் பொறுப்புகள் மற்றும் மூலதன அர்ப்பணிப்பு ஆகியவை நிதிக் கூற்றின் குறிப்பு 8இல் கொடுக்கப்பட்டுள்ளன.

ஐந்தொகைத் திகதியின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைக்குப் பின்னரான நிகழ்வுகள் பொருண்மைத்துவம் கவனத்தில் எடுக்கப்பட்டு, தேவையான விடத்து உரிய சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஐந்தொகையின் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பிறகு ஏற்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் ஏதும் இல்லை, இது சரிசெய்தல் தேவைப்படும் நிறுவனத்தில் எந்தவொரு பொருள் விளைவையும் ஏற்படுத்தும்.

இயங்கும் நிலை

வியாபார நடவடிக்கைகளைத் தொடர நிறுவனத்திடம் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக பணிப்பாளர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதன்படி, நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதில் தற்போதைய அக்கறையின் அடிப்படையில் செயற்படுவது பொருத்தமானது எனப் பணிப்பாளர்கள் கருதுகின்றனர்.

கணக்காய்வாளர்கள்

மீளாய்வாண்டின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வாளராகச் செயற்பட்டுள்ளார். கணக்காய்வாளர்களாக அல்லாத வேறு எத்தகைய தொடர்போ அல்லது ஆர்வமோ தமக்கு இருக்கவில்லை என்பதை கணக்காய்வாளர் தலைமை அதிபதி உறுதிப்படுத்தி உள்ளார். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் ஒழுக்க நியதிகளுக்கு அமைவாக தாம் சுதந்திரமாகச் செயற்பட்டதாக உறுதிப்படுத்தியிருந்தனர். நிதியாண்டில் கணக்காய்வாளர்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 14 இல் தரப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் பீஈடி சுற்றறிக்கை 01 இற்கமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியை அடுத்த ஆண்டிற்காக நியமனம் செய்ய முன்மொழியப்பட்டது மற்றும் அவர்களை நியமிப்பது மற்றும் அவர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்ய பணிப்பாளர்கள் அங்கீகரிக்கும் தீர்மானம் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் முன்மொழியப்படும்.


கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் சபையின் கட்டளைப்படி

.....	.....	.....
பணிப்பாளர்		**எக்கவுன்டிங் சிஸ்டம்ஸ் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவட்)லிமிடெட்**

நிதிசார் வெளிப்பாடுகள்


Production

Year	M.T.
2008/9	877
2009/10	915
2010/11	771
2011/12	888
2012/13	1018
2013/14	848
2014/15	712
2015/16	771
2016/17	811
2017/18	750
2018/19	732
2019/20	573




Sales

Year	M.T.
2008/9	497
2009/10	295.2
2010/11	760.3
2011/12	850.3
2012/13	537.8
2013/14	793
2014/15	708.5
2015/16	558.6
2016/17	530
2017/18	537
2018/19	530
2019/20	413




Revenue

Year	Rs.Mn.
2008/9	60.4
2009/10	21.1
2010/11	105
2011/12	128
2012/13	91.6
2013/14	143.6
2014/15	122.5
2015/16	109
2016/17	112.4
2017/18	123.4
2018/19	127.55
2019/20	126.62




Gross Profit

Year	Rs.Mn.
2008/9	44.8
2009/10	13.1
2010/11	62.4
2011/12	74.9
2012/13	53.5
2013/14	91.36
2014/15	56.35
2015/16	44.08
2016/17	45.47
2017/18	57.19
2018/19	47.89
2019/20	55.76




Net Profit Before Tax

Year	Rs.Mn.
2008/9	37.3
2009/10	1.5
2010/11	37.7
2011/12	54.3
2012/13	16.4
2013/14	21.18
2014/15	-10.84
2015/16	2.39
2016/17	-2.5
2017/18	-2.9
2018/19	-1.6
2019/20	9.7



Net Assets

Year	Rs.Mn.
2008/9	4.4
2009/10	137
2010/11	166
2011/12	214
2012/13	423.4
2013/14	367.5
2014/15	337
2015/16	336
2016/17	334
2017/18	329.7
2018/19	325.82
2019/20	330.59



கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

வருடாந்தக் கணக்குகள்
2019/20

2019 ஏப்ரல் 01 ஆம் திகதியில் இருந்து
2020 மார்ச் 31 ஆம் திகதி வரை

.

கஹடகஹகிறபைட் லங்கா லிமிடட்
கணக்குகள் 2019/20

பொருளடக்கம் **பக்கம்**

கூட்டு நிறுவனத் தகவல்கள்	01
கணக்காய்வாளர்களின் அறிக்கை	02-09
விரிவான வருமானக் கூற்று	10
நிதி நிலமைக் கூற்று	11
உரிமை மூலதன மாற்றக் கூற்று	12
காசுப் பாய்ச்சற் கூற்று	13
முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்	14-21
நிதிக்கூற்றுகளின் வெளிப்படுத்துகைகள்	22
கணக்குக் குறிப்புகள்	23-31
வருமான வரிக் கணிப்பீடு	32-34

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

2020 மார்ச் 31 இல் உள்ளவாறான கூட்டு நிறுவனத் தகவல்கள்

கம்பனியின் பெயர்
கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

சட்ட வடிவம்
நிதி அமைச்சின் கீழ் உள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி

பங்குரிமை மற்றும் உரிமை
இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரிச் செயலாளரால் 100% உரிமைகொள்ளப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டிய, கொழும்பு - 05

சுரங்கம்
கஹடகஹ சுரங்கம், மதுரகொட, தொடங்கஸ்லந்த

தொடர்பு

தலைமை அலுவலகம்			**சுரங்கம்**		
தொலைபேசி	:	011- 2368737	தொலைபேசி	:	037-2252015
தொலைநகல்	:	011- 2058062	தொலைநகல்	:	037-4931711
மின்னஞ்சல்	:	kgll@sltnet.lk			
இணையத்தளம்	:	www.kgrhite.lk			

நியதிச் சட்ட நிலை
2007ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டது.

கம்பனியின் பதிவு இல.
பீப்பீ 1513

திரு. மொஹமட் ரபீக் மொஹமட் ஹம்ஜாட்	(13.03.2019 இருந்து 09.12.2019)
திரு.கே.டி.சித்ரபால, மேலதிகச் செயலாளர், PE (கடமை அணவல்)	(17.12.2019 இருந்து 12.02.2020)
திரு.நீல் வத்துஹேவா	(13.02.2020 இல் இருந்து)
திரு.என்.பி.ஏ.ஆர.ஜயவர்தன	(13.03.2019 இருந்து 15.04.2019)
திரு.ஜே.ரஸ்நாயக்க	(15.04.2019 இல் இருந்து)
திரு.ஏ.டி.எல்.ஜி.கலன்சூரியஸ	(16.01.2020 இல் இருந்து)
திரு.இஸ்மியில் மொஹமட் ஜுனைஸ்	(13.03.2019)
திரு.உதுமான்கண்டு மொஹமட் நிஸார்	(13.03.2019)
திரு.பாலசூரிய முதலியான்சலாகே நந்த விபுல பண்டார பாலசூரிய	(13.03.2019)
திரு.சாரங்க அரம்பட்ட	(13.03.2019 இல் இருந்து 09.12.2019 வரை)
திரு.ஏ.எச்.எம்.அலவி	(13.03.2019 இல் இருந்து 09.12.2019 வரை)
திரு.எல்.கே.ஜகத் பிரியங்கர	(28.02.2020 இல் இருந்து 18.06.2021 வரை)
திரு.மொஹமட் புவாட் முசாம்பில்	(28.02.2020 இல் இருந்து)
திரு.டபில்யூ.என்.ஆர்.பி.தமித் மேவன்	(28.02.2020 இல் இருந்து)
திரு.ஜனித் தினுக் ஸொக்மன்	(28.02.2020 இல் இருந்து)
திரு.எஸ்.எஸ்.கட்டவலகெதர	(28.02.2020 இல் இருந்து)

செயலாளர்
எக்கவுண்டிங் சிஸ்டம்ஸ் செகடேரியல் சேர்விஸஸ் (பிரைவேட்) லிமிடட்
இல. 02, காசல் ஒழுங்கை, கொழும்பு 04

கணக்காய்வாளர்கள்
இலங்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதி

வங்கியாளர்கள்
இலங்கை வங்கி
கொள்ளுப்பிட்டி மற்றும் ரிதிகம
தேசிய சேமிப்பு வங்கி ரிதிகம

TAC/A/KGLL/FS/2020 **2022.06.20**

தலைவர்
கஹடகஹ கிரபயிட் லங்கா கம்பனி

கஹடகஹ கிரபயிட் லங்கா கம்பனியின் 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதன் செயற்பாடுகள் மீது 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12ஆம் இலக்கத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கஹடகஹ கிரபயிட் லங்கா கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பனியின் 2020 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) சிறிய மற்றும் நடுத்தர நிறுவனத்திற்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17.19 பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் உற்பத்தித்திற்ன ஆயுள் காலம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தினால் முழுமையாக தேய்வு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் உள்ள ரூ.5,407,392 பெறுமதியான 55 நிலையான சொத்து அயிட்டங்கள் மேலும் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த மதிப்பீடு செய்யப்பட்ட தவறின் நியமம் 10.15 – 10.18 பந்தியின் பிரகாரம் திருத்தங்கள் செய்யப்பட்டு சரியான தொகையை நிதிக்கூற்றில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2020 ஜனவரி மாதம் கணிப்பீடு செய்யப்பட்ட காரீயத் தொகைக்கு சீராக்கம் செய்யப்பட்டு 31 மார்ச் 2020ஆம் திகதிக்குரிய தொகை அடையாளம் காணப்பட்டிருந்தது. அதன்படி, 432.32 மெற்றிக் தொகை விற்பனையை 413 மெற்றிக் தொன் என குறிப்பிடப்பட்டதன் காரணமாக இறுதி காரீயத் தொகை 19.32 மெற்றிக்தொன்னால் அதிகரித்திருந்தது. கணிப்பீட்டுக்கு அமைவாக அதிகரித்திருந்த அத்தொகையின் பெறுமதி ரூபத 3,348,926 ஆவதனால் இறுதிக் கையிருப்பு அந்தத் தொகையினால் அதிகரித்து, உற்பத்தி ஆகுசெலவு (காரீய ஆகுசெலவு) அந்த அளவினால் குறைந்திருந்தது.

(இ) 2017ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட காரீயத் தொகைக்கு நிதி சீராக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் காபன் வீதம் நூற்றுக்கு 97க்கும் 99க்கும் இடையில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது எனக் குறிப்பிட்டு விற்பனை நிராகரிக்கப்பட்டிருந்தது. எனினும் இரண்டு தரப்பினருக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைவாக அந்த விற்பனைக்காக டொலர் 28,000 கழிவு கோரப்பட்டிருந்ததுடன் 2019.̓.2020ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் ஏற்றுமதிப் பெறுமதியில் அந்தத் தொகை கழிக்கப்பட்டு மிகுதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கழிக்கப்பட்ட டொலர் 28,000 (ரூ.5,003,751) தொகை நட்டமாக கருதப்பட்டு கணக்கீடு செய்யப்படாமல் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் விற்பனைக்கு சீராக்கல் செய்யப்பட்டமையினால் வருடத்தின் விற்பனை அந்தத் தொகையினால் குறைவடைந்திருந்தது.

(ஈ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நிலுவை மின்சாரப் பட்டியல் மீதி மீது அறிடப்பட்ட ரூபா 208,926 பெறுமதியுடைய வட்டி, உற்பத்தி ஆகுசெலவு (காரீய ஆகுசெலவு) கணக்கீடு செய்யும் போது உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் உற்பத்தி ஆகுசெலவு வட்டித் தொகையினால் அதிகரித்திருந்தது.

(உ) 2003ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவைப்பு இணைந்த 8 ஊழியர்களுக்குரிய ரூபா 1,331,000 பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதன்படி பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் நிலுவைத்தொகை குறைவாகவும் மொத்த இலாபம் அந்தத் தொகையினால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் மற்றும் 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பந்தி 163(2)(இ) மற்றும் 2018ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பந்தி 12(அ) என்பவற்றில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு அமைவாக, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களின்றி, கணக்கீட்டுக்கு அவசியமான அனைத்து விடயங்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதுடன், எனது ஆய்வின் போது உரிய வகையில் நிதி அறிக்கை நிறுவனத்தினால் பேணப்பட்டிருந்தது.

- நிறுவனத்தின் நிதி அறிக்கை 2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 151ஆம் பந்திக்கு அமைவாக இணங்குகின்றது.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (ஜை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்று கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதாகிறது.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (ஸை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய இவ் ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெறப்பட்ட சாட்சிகள் அடிப்படையிலும், போதுமானளவு விடயங்களுக்கு வரையறுத்து பின்வரும் கூற்றுக்களை செய்வதற்கு போதுமான எதுவும் எனது கவனத்துக்கு உட்படவில்லை.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய சபையின் கட்டுப்பாட்டு சபையின் எவராவது உறுப்பினருக்கு சபையின் தொடர்பில் நேரடியாகவோ, ஏனைய வழிகளிலோ சாதாரண வியாபார நிலமைக்கு புறம்பான தொடர்புகள் இருப்பதாகவும்,

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஏதாவது தொடர்புடைய எழுத்து மூல சட்டத்துக்கு அல்லது நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு ஏற்புடையதல்லாத வகையில் செயற்பட்டுள்ளதாக,

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ)	2018 திசெம்பர் 07 திகதிய 03.∴2018 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் ஐ இன் தொடர் இலக்கம் 04	கம்பனி 2016.∴17 மற்றும் 2017.∴18 ஆண்டுகளின் போது முறையே ரூபா 1,418,945 மற்றும் ரூபா 4,399,723 இற்கான நட்டமொன்றினை பெற்றிருந்தமையால் ஒரு நபருக்கு செலுத்தக்கூடிய மிகை ஊதியம் ரூபா 3,000 தொகை எனினும், பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்று மேற்கொண்டு ஒரு நபருக்கு ரூபா 13,500 தொகை வீதம் ரூபா 1,413,250 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக ரூபா 996,250 தொகை மிகையாக செலுத்தியிருந்தது.
(ஆ)	2013 செப்தம்பர் 11 திகதி அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 02.∴2013	மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடுகள் ஒதுக்கம் ரூபா 3,796,539 தொகையாகும். அந்த ஏற்பாடுகளுக்கு நேரொப்ப ஆண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 3,111,871 தொகை நிகர முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அவற்றில் இருந்து ஊழியர் சம்பளம் செலுத்துவதற்காக ரூபா 3,287,797 தொகை பெற்றிருந்தது.
(இ)	2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடி.∴12 இலக்கங் கொண்ட பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 7.4.5	சொத்துக்கள், பொருட்பதிவேட்டு மற்றும் இருப்புப் பதிவேட்டு பண்டங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு மேற்கொண்டிருக்கவில்லை.
(ஈ)	2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40	அதிகாரச் சட்டம் செயற்படும் நாள் முதல் இரண்டு வருடங்களை மிகைக்காத காலவரையறையினுள்ளே நிறுவனத்தின் ஆளுகை சபையினால் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்ய வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2022 மார்ச் மாதம் வரை உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.
(உ)	2018 ஜூலை 18 திகதிய முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 03.∴2018 இன் பந்தி 1(மை)	குறைந்த உற்பத்தி 65 மெட்ரிக் தொன்களாக காணப்பட்ட போது சுரங்க மற்றும் பராமரிப்பு பிரிவு ஊழியர்களுக்கு நாளாந்தம் ரூபா 300 தொகை கொடுப்பனவு ஒன்றும், தயாரிப்புப் பிரிவின் மற்றும் அலுவலக

		பதவியணிக்கு முறையே கொடுப்பனவில் 50 சதவீதம் மற்றும் 40 சதவீதம் ஆக ஊக்குவிப்புக் கொடுப்பனவு ஒன்று செலுத்தப்பட்ட போதிலும், அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.
(ஊ)	2007 ஒக்தோபர் 04 திகதிய இலக்கம் னுஆளு.்1f.்.ஊ9 கொண்ட முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் கடிதம்	i. கம்பனிக்கு அங்கீகரிக்கப்பட்ட 79 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட வேண்டியது 06 மாத ஒப்பந்த அடிப்படையில் ஆக இருக்க வேண்டியதுடன், இலாபகரத் தன்மையின் மீது ஒப்பந்த காலத்தை நீடிப்பு செய்வதற்காக கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அதற்கு முரணாக 2014 நவம்பர் 12 திகதிய பொது நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 25.்.2014 கொண்ட சுற்றறிக்கை கம்பனிக்கு பொருந்தாத போதிலும், சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனத்தின் 59 ஊழியர்களை நிரந்தரப்படுத்தப்பட்டிருந்தது. ii. ஒப்பந்த பதவியணிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டு இறுதியிலும் நிறுவனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பதவியணி ஒன்று காணப்படாத போதிலும், உள்ளவாறான பதவியணி 195 ஆக காணப்பட்டது.

- 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய ஏதாவது தொடர்புடைய அதன் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை ஏற்புடையதல்லாத வகையில் செயற்பட்டுள்ளதாக,

- சபையின்யின் வளங்கள் கேள்விமனு கோரி, சிக்கனமாக, வினைத்திறனுடனும் செயல்திறனுடனும் உரிய நேர கட்டத்திலும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பொருத்தப்பாடுடைய சட்டங்களுக்கு அமைய நடைபெறவில்லை என்பதை குறிப்பிடுவதற்கு.

அ) இறுதி உற்பத்தியின் பெறுமதியை அதிகரித்தல் மற்றும் போட்டி அடிப்படையான சந்தையொன்றை பெற்றுக்கொள்வதன் மூலம் இலாபத்தை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்று மீளாய்வாண்டு இறுதி வரை தயாரித்திருக்காததுடன், 2018, 2019 ஆண்டுகளின் போது முறையே

காரீயம் 834 மெ.தொ. மற்றும் 925 மெ.தொ. ஆக குறைந்த காபன் சதவீதத்தை உடைய விற்பனை செய்ய முடியாத இருப்புக்களின் அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது.

ஆ) முன்னைய ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் தென்னை விளைச்சல் முறையே 10,360 காய்கள் மற்றும் 6,276 காய்கள் ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விளைச்சல் 39 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது தென்னந் தோட்ட ஊழியர்களுக்காக ரூபா 2,422,950 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்ததுடன், அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 241,955 தொகையாக காணப்பட்டது. அதன் படி தென்னை பயிர் செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்கு ஒப்பாக விளைச்சல் மற்றும் வருமானம் போதியளவாக காணப்பட்டவில்லை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) முன்னைய ஆண்டு முதல் காணப்பட்ட வெளிநாட்டு கொள்வனவாளர்கள் 4 பேர் மீளாய்வாண்டளவில் 2 கொள்வனவாளர்கள் வரை குறைவடைந்திருந்தது. அந்தக் கொள்வனவாளர்களில் ஒரு கொள்வனவாளரின் ஒரு கம்பனி கடந்த ஆண்டு 57 சதவீதத் தொகை மற்றும் மீளாய்வாண்டு 46 சதவீதத் தொகையாக மொத்த விற்பனவில் கூடிய பகுதி ஒன்றை கொள்வனவு செய்யும் தனியான கொள்வனவாளராக காணப்படல், கொள்வனவாளர்களிடம் கிடைக்கக் கூடிய கட்டளைகளின் எண்ணிக்கையில் குறைவொன்று அவதானிக்கப்பட்டமை, ஏற்றுமதி செய்யும் இருப்புக்களின் தரத்தினை மூன்றாம் தரப்பினர் ஒருவரால் உரிய முறையில் சான்றுபடுத்தப்பட்டிருக்காமையால் காரீயம் வழங்கும் சந்தையை விரிவுபடுத்துதல் மூலம் வெளிநாட்டு செலாவணி வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல் தொடர்பாக கம்பனியின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காரீயத்தின் விலையை 10 சதவீதத்தினால் அதிகரிப்பதற்காக 2019 ஆண்டு கூடிய விலைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் ஒரு வெளிநாட்டு கம்பனிக்குரிய 2018 ஆண்டில் செய்யப்பட்ட கட்டளையில் மீதித் தொகையை வழங்குவதற்கு இருந்த போதிலும் கட்டளை கிடைத்த சந்தர்ப்பத்தில் விலை தொடர்பாக இணக்கம் ஒன்று மேற்கொண்டிருக்காமையால் 10 சதவீத விலை அதிகரித்தலுக்கு அந்த கம்பனி இணங்கியிருக்காமையால் அந்த கம்பனி தொடர்பாக 5 சதவீதத்தினால் விலை அதிகரிக்கப்பட்டிருந்தது.

(இ) 2019.̇20 கணக்காண்டின் போது கம்பனியின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி உற்பத்தி 609 மெ.தொ. 622 மெ.தொ. இடைப்பட்ட எண்ணிக்கைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான உற்பத்தி 572.87 மெ.தொ. தொகையாக இருந்தது. அதன் படி முன்னைய ஆண்டில் 732 மெ.தொ. உற்பத்திக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் உற்பத்தி 159 மெ.தொ. இனால் குறைவடைந்திருந்தது.

டபில்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

கஹடகஹ கிறபைட் லங்காலிமிடெட்

விரிவான வருமானக் கூற்று

மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டு

	குறிப்பு	2019/2020 ரூபா	2018/2019 ரூபா
வருமானம்			
கிறபைட் விற்பனை	10	126,622,732	127,558,406
நேரடிக் கிரயம், அகழ்வுக் கிரயம	11	(70,855,853)	(78,948,116)
மொத்த இலாபம்/(நட்டம்)		**55766,879**	**48,610,290**
நானாவித வருமானம்	12	(2,006,480)	(1,608,215)
கழி: செயற்பாட்டுக் கிரயம்			
தனியாள் கிரயம்	13	(21,913,227)	(23,372,200)
தாபன மற்றும் நிர்வாகக் கிரயம்	14	(8,260,398)	(8,244,612)
பராமரிப்புக் கிரயம்	15	(968,821)	(580,188)
பயன்பாட்டுக் கிரயம்	16	(491,469)	(593,039)
பெறுமானத்தேய்வுக் கிரயம்	17	(5,823,917)	(5,950,869)
ஈட்டுகை / நட்டம்		(269,964)	1,364,503
விதந்துரைக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம்		(3,796,539)	(2,510,595)
பணிக்கொடை நிர்வாகக் கிரயம		(41,524,336)	(39,887,001)
விற்பனை மற்றும் விநியோகக் கிரயம்	18	(1,381,626)	(1,433,812)
ஏனைய கிரயங்கள்	19	(1,064,606)	(8,530,617)
தொழிற்பாட்டு இலாபம் / நட்டம்		9,789,832	(2,849,355)
சேதம் வரிக்கு முன்னரான இலாபம் / நட்டம்		9,789,832	(2,849,355)
வரியிடல்		(3,927,737)	(2,154,393)
பிற்போடப்பட்ட வரிச் செலவுகள்		(10,155)	48,124
வரிக்கு பின்னான இலாபம்/ (நட்டம்)		5,851,941	(4,955,624)
ஏனைய விரிவான வருமானம் இவ்வருடத்திற்கான ஏனைய விரிவான வருமானம் / (நட்டம்)			
இவ்வருடத்திற்கான மொத்த விரிவான வருமானம்/ (நட்டம்)		**5,851,941**	**(4,955,624)**

கஹடகஹ கிறபைட் லங்காலிமிடெட்

விரிவான வருமானக் கூற்று

மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டு	குறிப்பு	2019/20 ரூபா	2018/2019 ரூபா
சொத்துகள			
நடைமுறையல்லாச் சொத்துகள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	20	165,613,149	178,112,451
தொழிற்பாடல்லா சொத்துகள்	21	3,541,760	3,541,760
தெங்குப் பயிற்ச் செய்கை அபிவிருத்தி		1,694,235	1,694,235
பணிக்கொடை முதலீட்டு நிதி		12,288,004	12,822,661
பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்		194,349	204,504
		183,331,498	**196,375,611**
நடைமுறைச் சொத்துக்கள்			
கையிருப்பு	22	183,354,590	162,939,431
கடன்படுனர்கள், வைப்பு மற்றும் கிடைப்பனவுகள்	23	14,147,604	13,010,803
காசு மற்றும் காசுக்கு சமனானவை	24	4,768,494	841,754
		204,261,688	**176,791,988**
		387,593,187	**373,167,599**
மொத்த சொத்துகள்			
உரிமைப் பங்குகள் மற்றும் பொறுப்புகள்			
மூலதனம் மற்றும் ஒதுக்குள்			
குறிப்பிடப்பட்ட மூலதனம்	25	13,000,000	13,000,000
தக்கவைக்கப்பட்ட உழைப்புகள்		317,599,855	311,747,914
		330,599,855	**324,747,914**
நீண்டகால பொறுப்புகள்			
பணிக்கொடை ஏற்பாடு	27	**20,**440,407	17,297,407
என்எஸ்பி கடன் கணக்கு – நீண்ட காலம்		3,010,566	5,655,979
		23,450,973	22,953,386
நடைமுறைப் பொறுப்புகள்			
என்எஸ்பி கடன் கணக்கு – நீண்ட காலம்		2,645,414	2,324,550
வர்த்தக மற்றும் ஏனைய கடன்படுனர்கள			4,044,385
	28	4,864,574	3,605,439
வரியிடலுக்கான ஏற்பாடு	29	7,525,638	
அட்டுறு கட்டணங்கள		18,506,734	15,491,925
	30		
		33,542,359	**25,466,299**
		387,593,187	**373,167,599**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நான் உறுதிப்படுத்துகின்றேன்.

....
முகாமையாளர் கணக்காளர்

இந் நதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதுடன் சபையின் சார்பாகவும் சபைக்காகவும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

....
தலைவர் பணிப்பாளர்

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

உரிமை மூலதன மாற்றக்கூற்று

	பங்கு மூலதனம்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம்	திரண்ட இலாபம்/(நட்டம்)	மொத்தம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2018 ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி	13,000,000	-	316,703,538	329,703,538
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)	-	-	(3,881,427)	(3,881,427)
2019 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி	**13,000,000**	**-**	**312,822,111**	**325,822,111**
2019 ஏப்பிரல் 01 ஆம் திகதியன்று மீதி	13,000,000.00	-	312,822,111	325,822.111
முந்தைய வருட சீராக்கல் குறிப்பு 01			(1.074,197)	(1,074,197)
ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)			5,851,941	5,851,941
2020 மார்ச் 31 ஆம் திகதியன்று மீதி	**13,000,000**	**-**	**317,599,855**	**317,599,855**

குறிப்பு 01 முன்னைய வருட சீராக்கல்
ஏனைய வருமானம் பாதுகாப்பு கட்டணத்திற்கான ஒதுக்கினைக் கொண்டுள்ளது.

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்

காசுப்பாய்ச்சற் கூற்று

மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது	2019/20	2018/2019
	இல. ரூபா	இல. ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/ (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்		
வருமான வரிச் செலவினங்களுக்கு முன்னரான தேறிய இலாபம்.்.(நட்டம்)	9,789,832	(2,849,355)
சீராக்கங்கள் :		
பணிக்கொடைக்கான ஏற்பாடு	3,796,539	2,510,595
முன்னைய ஆண்டுச் சீராக்கம்		
உருவக நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு	21,915,171	21,113,966
தொழிற்பாடல்லாத சொத்துகளின் மீதான சேதம்	-	-
நாணயமாற்ற நட்டம்	(269,964)	1,364,503
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்	**35,231,578**	**22,139,709**
இருப்புகள் (அதிகரிப்பு)/குறைவு	(22,406,159)	(25,904,008)
பெறவேண்டியவைகள் (அதிகரிப்பு)/குறைவு	(1,136,801)	(507,911)
கடன்கொடுத்தோரின் (குறைவு) /அதிகரிப்பு	820,189	2,447,338
அட்டுறு செலவினங்கள் (குறைவு) /அதிகரிப்பு	3,014,809	4,968,733
செயற்பாடுகளில் இருந்து உருவான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்	**15,523,615**	**3,143,862**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்		
தொட்டுணரக்கூடிய நிலையான சொத்துக்களின் கொள்வனவு	(9,415,869)	(7,978,450)
பணிக்கொடை முதலீட்டு நிதியம்	534,656	(6,235,022)
முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்	**(8,881,212)**	**(14,213,472)**
நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள		
செலுத்தப்பட்ட வருமான வரி	(7,538)	(3,000,000)
என்எஸ்பி கடன் கணக்கு – எயர் கொம்பிறைசர் கொள்வனவு	(2,324,549)	7,980,529
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(653,540)	(112,854)
நிதி நடவடிக்கைகளில் இருந்தான /(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல	**(2,985,627)**	**4,867,675**
காசு மற்றும் காசுக்கு சமனானவை மீது வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தின் தாக்கம்	269,964	(1,364,503)
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளிலான தேறிய அதிகரிப்பு/ (குறைவு)	3,926,740	(7,566,437)
ஆண்டின் ஆரம்பத்தில்ான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்	841,754	8,408,191
ஆண்டின் இறுதியிலான காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்	**4,768,494**	**841,754**

காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்

இலங்கை வங்கி – ரிதீகம	3,421,459	236,598
இலங்கை வங்கி - கொள்ளுப்பிட்டி	33,477	502,096
டீஎப்சீ டொலர் க/கு இலங்கை வங்கி - கொள்ளுப்பிட்டி	1,303,017	72,182
சில்லறைக் காசு - தலைமை அலுவலகம்	3,032	9,074
சில்லறைக் காசு - சுரங்க அலுவலகம்	7,509	21,804
	4,768,494	**841,754**

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட்

2020 மார்ச் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான குறிப்புகள்

1. கூட்டமைப்புத் தகவல்கள்

1.1 பொது

கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடட் முன்னர் "மக்கள்" மயமாக்கப்பட்ட கம்பனியாகக் காணப்பட்டதுடன் 1996 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க பொது முயற்சிகள் அதிகாரச்சட்டத்தின் மீளமைக்கப்பட்டு அரசாங்கத்துடன் 1997 ஆம் ஆண்டில் மீள உரித்தளிக்கப்பட்டது. தற்போது முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான வணிக நிறுவகமாகச் செயற்பட்டு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டிய,கொழும்பு – 05 இல் அமைந்துள்ளது.

1.2 முக்கிய நடவடிக்கைகளும் செயற்பாட்டின் தன்மையும்

காலப்பகுதியின் போது நிறுவகத்தினால் காரீய உற்பத்தியும் ஏற்றுமதியும் முக்கிய நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றன.

1.3 பணிப்பாளர் பொறுப்புக் கூற்று

பணிப்பாளர் சபை நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு பொறுப்புடையதாகும்.

1.4 ஒப்பீட்டுத் தொகைகள்

முன்னைய ஆண்டிற்கான தொகைகளும் கூற்றுக்களும் நடைமுறை ஆண்டிற்கான வெளிப்படுத்தலுடன் இணங்கும் வகையில் மீள ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.1 தயாரிப்பின் அடிப்படை

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் அன்றி வரலாற்றுக் கிரய அளப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்கள் குறிப்பிடப்ப ட்டிருந்தால் அன்றி இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.2 இணக்கக் கூற்று

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் விநியோகிக்கப்பட்ட எஸ்எல்எப்ஆர்எஸ் மற்றும் எல்கேஏஎஸ் அடங்கிய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் படி, (இதன் பின்னர் எஸ்எம்ஈ இற்காக எஸ்எல்எப்ஆர்எஸ்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

